உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைத் திரட்டு




பார்த்திப வருடம் மாசித்திங்கள் 14ம் நாள்

26.02.2006

# மகா சிவராத்திரி மலர்

வெளியீடு

அகில இலங்கைத் திருமுறை மன்றம்

102, அரசடி வீதி, கந்தர்மடம்,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவராத்திரியில் ஓதத்தக்க

# பன்னிரு திருமுறைத் திரட்டு



நால்வர் பொற்றாள் எம்முயிர்த்துணையே


தொகுப்பு

**பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்**

ஆலோசகர்

அகில இலங்கைத் திருமுறை மன்றம்



வெளியீடு :

**அகில இலங்கைத் திருமுறை மன்றம்**

102, அரசடி வீதி கந்தர்மடம்,

யாழ்ப்பாணம்.

26.02.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகும் அமுதினை ஆமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே.

திருச்சிற்றம்பலம்

"ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க" எனப்பத்திசெய்து பாடுவார்க்குப் பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரானவன் இறைவன். ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குகின்ற இறைவனின் இன்னருள் இலகுவிற் பெறவைக்கும் உயர்ந்த கருவிகளாகச் சைவத்திருமுறைகள் விளங்குகின்றன. "அர்ச்சனை பாட்டேயாகும்" என இறைவன் திருவாக்கினால் அருளப்பட்ட பன்னிருதிருமுறைப் பாடல்களை சிவராத்திரி முதலிய புண்ணியப்புனித நாட்களிற் பாராயணஞ் செய்வது பெரும் புண்ணியமாகும்.

பலரும் பாராயணஞ்செய்து பயன்பெறும் பொருட்டுப் பொருத்தமான பன்னிருதிருமுறைப் பாடல்களைக் கொண்ட இத்திரட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் பார்த்திப வருட சிவராத்திரி தினத்தில் வெளியிடப்படுகிறது.

வருடா வருடம் இத்தினத்தில் இவ்வாறான வெளியீடுகளை வெளிவரச்செய்கின்ற வலம்புரி ஸ்தாபன இயக்குநர் சைவப்புரவலர் உயர்திரு.சி. வெற்றிவேலாயுதம் அவர்கள் வழமைபோல இவ்வருடச் சிவராத்திரி தினத்தில் இவ்வெளியீட்டிற்கான உதவிகளைச் செய்துள்ளார். அவர்களுக்கு சைவ உலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. இம்மலரை அச்சிட்ட பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வெளியீட்டினை அனைவரும் பெற்று பாராயணஞ் செய்து பயன் பெறுவாராக.

**வ.பேரின்பநாயகம்,**

**தலைவர்,**

**அகில இலங்கைத் திருமுறைமன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நூற்சிறப்பு

மகாசிவராத்திரி விரத புண்ணிய காலம் உலகில் உள்ள சகல சிவாலயங்களுக்கும் சிறப்புவழிபாட்டு நாளாகும். இதேபோல சகல சைவ மக்களுக்கும் கட்டாயமான விரதகாலமாகும். சிவராத்திரிதினத்திலுள்ள இரவு சிவபெருமானை வழிபட, பூசிக்க, தியானிக்க ஒதுக்கப்பட்டதாகும். இப்படியான சிவராத்திரிதின இரவுவேளையில் சிவவழிபாடுக்குப் புறம்பான செயல்களிலீடுபடுவது சைவசமய விரோதம் எனக் கருதலாம். இத்தினத்தில் உலகிலுள்ள சிவாலயங்களுள் குறிப்பிட்ட சில சிவாலயங்கள் சிவராத்திரிக்கெனத் தனித்துவமான சிறப்புடையவை. பாரதநாட்டிலுள்ள ஜோதிர்லிங்கத் தலங்கள் எனப்படும் பன்னிரு சிவாலயங்களும் இன்னும் சில சிவாலயங்களும் சிவராத்திரி வழிபாட்டுக்கு சிறப்புரிமை உடையனவாகும். இச்சிவாலயங்களுள் திருமுறைப்பாடல் பெற்ற சில சிவத்தலங்கள் உள்ளன. இப்படியான தலங்களுக்கு உரிய திருமுறைகளை சைவமக்கள் தாம் இருக்கும் அதாவது தாம் விரத வழிபாடு செய்யும் சிவாலயத்திலிருந்தே, இடங்களிலிருந்தே பாராயணம் பண்ணி வழிபடுவது பொருத்தமான செயலாகும்.

பன்னிரு ஜோதிர்லிங்கத்தலங்களுள் திருக்கேதாரம், ஸ்ரீ சைலம் என்பவை தமிழ் நாட்டுக்கு வெளியே உள்ள திருமுறைப்பாடல்பெற்றவை. தமிழ் நாட்டிலுள்ள ஒரேயொரு ஜோதிர்லிங்கத்தலம் இராமேஸ்வரமாகும். இம்மூன்று தலங்களுடன் திருவிடைமருதூர், திருக்காளத்தி, திருக்கேதீச்சரம், திருவண்ணாமலை, திருஆலவாய் என்னும் மதுரை திருவாரூரும் சிவராத்திரி புண்ணிய காலச் சிறப்புக்கு உரிய மகிமை வாய்ந்த சிவத்தலங்களாகும். இப்புண்ணியத் தலங்களுடன் இலங்கை வாழ்மக்களுக்கு உரிய மகாசிவராத்திரித் தலமாக நகுலேஸ்வரம் என்னும் கீரிமலைத்தலமும் உள்ளது. இத்தலத்துத் திருமுறைப்பாடல்கள் இல்லையாயினும் சிவபுராணம், பஞ்சாட்சர பதிகம் போன்றவற்றினால் நகுலேஸ்வரப்பெருமானை வணங்குவதோடு மகாசிவராத்திரித் தலங்களுக்குரிய சில திருப்பதிகங்களையும் பல தலங்களுக்கும் பொதுவாக அருளப்பட்ட சேத்திரக் கோவைப் பதிகங்கள் சிலவற்றையுமாவது மகாசிவராத்திரியை முன்னிட்டு அன்றும் அதற்கு முதல் சில தினங்களும் பாராயணம் செய்வது சிவபெருமானின் பெருங்கருணைக்கு நம்மை உரியவராகச் செய்யும்.

பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முதலாந் திருமுறை

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### திருவிடைமருதூர்

பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராஸ்ட்ரம்

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொடி றவுமானான்
அருந்தவ முனிவரொடா னீழற்கீழ்
இருந்தவன் வளநகரிடை மருதே. 01.

தோற்றவன் கேடவன் றுணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவனிறை புனனீள் சடைமேல்
ஏற்றவன் வளநகரிடை மருதே. 02.

படை யுடைமழுவினன் பால்வெண்ணீற்றன்
நடை நவிலேற்றினன் ஞாலமெல்லாம்
உடை தலையிடுபலி கொண்டுழல்வான்
இடை மருதினிதுறை யெம்மிறையே. 03.

பணை முலையுமையொரு பங்கனொன்னார்
துணை மதிண்மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணை துரந்தடு திறற்காலற்செற்ற
இணை யிலிவளநகரிடை மருதே. 04.

பொழிலவன் புயலவன் புயலியக்குந்
தொழிலவன் றுயரவன் றுயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகரிடை மருதே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையவன் புனலொடு மதியம்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடனஞ்சை யுண்ட
இறையவன் வளநகரிடை மருதே. 06.

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம்படர் சடையன்
முனிவரொட மரர்கண் முறைவணங்க
இனிதுறை வளநகரிடை மருதே. 07.

தருக்கின வரக்கன தாளுந்தோளும்
நெரித்தவ னெடுங்கைமா மதகரியன்
றுரித்தவ னொன்னலர் புரங்கண்மூன்றும்
எரித்தவன் வளநகரிடை மருதே. 08.

பெரியவன் பெண்ணினொடா ணுமானான்
வரியரவணை மறிகடற் றுயின்ற
கரியவன லரவன்காண் பரிய
எரியவன் வளநகரிடை மருதே. 09.

சிந்தையில் சமணொடு தேர்சொன்ன
புந்தியிலுரை யவைபொருள் கொளாதே
அந்தண ரோத்தினோ டரவமோவா
எந்தைதன் வளநகரிடை மருதே. 10.

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும் வல்லார்
உலகு றுபுகழினோ டோங்குவரே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## திருப்பருப்பதம்

பண் : வியாழக்குறிஞ்சி　　　　இராகம் : சௌராஷ்ட்ரம்

திருச்சிற்றம்பலம்

சுடுமணி யுமிழ்நாகஞ் சூழ்தரவரைக் கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறலனொரு தேறி
விடமணி மிடறுடையான் மேவியநெடுங் கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே. 01.

நோய்புல்கு தோறிரைய நரைவழி நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே. 02.

துளியுறு தயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இளியுறு பயனா தலிரண்டு றமனம் வையேல்
களியுறு மரமே றிக்கருமுசுக் கழையுகளும்
பளியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே. 03

கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்
எங்கனோ யகல நின்றானென வருளீசனிடம்
ஐங்கணை வரிசிலையான நங்கனை யழகழித்த
பைங்கண் வெள்ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே. 04.

துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந் தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கெழு சிறப்பொ வார்செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சேயிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுள் திடம்வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம்பரவுதுமே. 06.

புடைபுல்குபடர் கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடிமிசை யேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்தவெண்ணீ றணிவான்
படைபுல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. 07.

நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்று நின்றயராதே
மனத்தினை வலித்தொழிந் தேனவலம் வந்தடையாமைக்
கனைத்தெழு திரள் கங்கை கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப் பருப்பதம் பரவுதுமே. 08.

மருவியவல் வினைநோய வலம்வந்தடை யாமல்
திருவுருவமர் ந்தானுந் திசைமுகமுடையானும்
இருவரு மறியாமை யெழுந்த தோரெரிநடுவே
பருவரையுற நிமிர்ந்தான் பருப்பதம் பரவுதமே. 09.

சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே. 10.

வெண் செநெல்விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண் செலப்பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன் சொலினாற் பரவு ஞானசம்பந்த னல்ல
ஒண் சொலினிவைமாலை யுருவெணத்தவமாமே. 11.

திருச்சிற்றம்பலம்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருவண்ணாமலை

**பண்: தக்கேசி** **இராகம் : காம்போதி**

திருச்சிற்றம்பலம்

பூவார் மலர்கொண்டடியார் தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார் புரங்களெரித்தவன் றுமூவர்க்கருள் செய்தார்
தூமாமழை நின்ற திரவெருவித்தொறு வின்னிரையோடும்
ஆமாம்பிணை வந்தணையுஞ் சாரலண் ணாமலையாரே. 01.

மஞ்சைப் போழ்ந்தம தியஞ்சூடும்வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத்தடக்குமதுவு நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற் பேசும்வேடர்மட வாரிதண மதுவேறி
அஞ்சொற் கிளிகளாயோ வென்னுமண்ணா மலையாரே. 02.

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மேல்
ஊனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்கண்
ஆனைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. 03.

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர் பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. 04.

உருவிற்றிகழு முமையாள் பங்கரிமையோர் பெருமானார்
செருவில்லொ ருகால்வளையவூ ன்றிச்செந்தீ யெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த பருமா மணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ் சாரலண்ணா மலையாரே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தோரூழி யடியாரேத் தவிமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார்பாவத் தீர்க்குநிமல ருறைகோயில்
கனைத்தமே திகாணாதாயன் கைம்மேற் குழாலூத
அனைத்துஞ் சென்றுதிரளுஞ் சாரலண்ணா மலையாரே. 06.

வந்தித்திருக் குமடியார் தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந் தபாவந்தீர்க்கும் பரமனுறை கோயில்
முந்தியெழுந் தமுழவினோசைமுதுகல்வரை கண்மேல்
அந்திப்பிறை வந்தணையுஞ் சாரலண்ணா மலையாரே. 07.

மறந்தான் கருதிவலியை நினைந்துமாறா யெடுத்தான்றோள்
நிறந்தான் முரிய நெரியவூன்றி நிறையவருள்செய்தார்
திறந்தான் காட்டியருளாயென்று தேவரவர் வேண்ட
அறந்தான் காட்டியருளிச்செய் தாரண்ணா மலையாரே. 08.

தேடிக்காணார் திருமால்பிர மன்றேவர் பெருமானை
மூடியோங்கி முதுவேயுகுத்த முத்தம்பல கொண்டு
கூடிக்குறவர் மடவார் குவித்துக்கொள்ள வம்மினென்
றாடிப்பாடி யளக்குஞ் சாரலண்ணா மலையாரே. 09.

தட்டையிடுக் கித்தலையைப் பறித்துச்சமணே நின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக் கொள்ள வேண்டாபேணித் தொழுமின்கள்
வட்டமுலை யாளுமையாள் பங்கர்மன்னி யுறைகோயில்
அட்டமாளித் திரள்வந் தணையுமண்ணா மலையாரே. 10.

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாரூர்

பண்: குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

சித்தந்தெளிவீர்காள், அத்தனாரூரைப்
பத்திமலர்தூவ, முத்தியாகுமே. 01.

பிறவியறுப்பீர்காள்
அறவனாரூரை
மறவாதேத்துமின்
துறவியாகுமே. 02

துன்பந்துடைப்பீர்காள்
அன்பன ணியாரூர்
நன்பொன்மலர் தூவ
இன்பமாகுமே. 03.

உய்யலுறுவீர்காள்
ஐயனாரூரைக்
கையினாற்றொழ
நையும்வினை தானே. 04.

பிண்டமறுப்பீர்காள்
அண்டனாரூரைக்
கண்டுமலர்தூவ
விண்டுவினைபோமே. 05.

பாசமறுப்பீர்காள்
ஈசனணியாரூர்
வாசமலர்தூவ
நேசமாகுமே. 06.

வெய்யவினைதீர
ஐயனணியாரூர்
செய்யமலர்தூவ
வையமுமதாமே. 07.

அரக்கனாண்மையை
நெருக்கினானாரூர்
கரத்தினாற்றொழத்
திருத்தமாகுமே. 08.

துள்ளுமிருவர்க்கும்
வள்ளலாரூரை
உள்ளுமவர் தம்மேல்
விள்ளும்வினை தானே. 09.

கடுக்கொள்சீவரை
அடக்கினானாரூர்
எடுத்துவாழ்த்துவார்
விடுப்பர்வேட்கையே. 10.

சீரூர்சம்பந்தன்
ஆரூரைச்சொன்ன
பாரூர்பாடலார்
பேராரின்பமே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இரண்டாந் திருமுறை

## திருக்கேதாரம்

பண்: செவ்வழி

இராகம் : எதுகுலகாம்போதி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சுகளிறும்மடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டிவழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனை நீலமொட்டலருங்கேதாரமே. 01.

பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிவருவண்டினம்
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே. 02.

முந்திவந்துபுரோதாயமூழ்கிமுனிகள்பலர்
எந்தைபெம்மானெனநின்றிறைஞ்சும்மிடமென்பரால்
மந்திபாயச்சரேலச்சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. 03.

உள்ளமிக்கார்குதிரைம்முகத்தாரொருகாலர்கள்
எள்கலில்லாவிமையோர்கள்சேரும்மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. 04.

ஊழியூழியுணர்வார்கள்வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சும்மிடமென்பரால்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்விரைதேரிய
கேழல்பூழ் திகிளைக்கமணிசிந்துங்கேதாரமே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுபூசிநிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள்சேருமிடமென்பரால்
ஏறிமாவின்கனியும்பலவின்னிருஞ்சுளைகளும்
கீறிநாளும்முசுக்கிளையொடுண்டுகளுங்கேதாரமே. 06.

மடந்தைபாகத்தடக்கிம்மறையோ திவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினை தீர்க்கநின்றார்க்கிடமென்பரால்
உடைந்தகாற்றுக்குயர்வேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேல்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்யுங்கேதாரமே. 07.

அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனால்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பரால்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிஞாழல்சுரபுன்னைமேல்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. 08.

ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்தகில்லாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றார்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுநிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. 09.

கடுக்கடின்றுகழிமீன்கவர்வார்கண்மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பாரவரெய்தவொண்ணாவிடமென்பரால்
அடுக்கநின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்றபெருமானுறைகின்றகேதாரமே. 10.

வாய்ந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
ஆய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவல்லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருக்கேதீச்சரம்

பண்: நட்டராகம் இராகம் : பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

விருதுகுன்றமா மேருவினாணரை வாவனலெரியம்பாப்
பொருதுமூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதியெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணிமாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினையடையாவே. 01.

பாடல்வீணையர் பலபலசரிதைய ரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவ ரமரர்கள்வேண்டநஞ் சுண்டிருள்கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற்கரையினி லெழிறிகழ்மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரந்தொழுதெழக் கெடுமிடர்வினைதானே. 02.

பெண்ணொர்பாகத்தர் பிறைதவழ்சடையின ரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர்பாடுவ ரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோ ரிச்சையினுழல்பவ ருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகே தீச்சரமடைபவர்க் கருவினையடையாவே. 03.

பொடிகொண்மேனியர் புலியதளரையினர் விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலை வேலினர்நூலினர் மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித் திருந்தகேதீச்சரம் பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடி பேணவல்லார்தம்மேன் மொய்த்தெழும்வினைபோமே.
04.

நல்லராற்றவு ஞானநன்குடையர்தம் மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசை வான்பிறப்பிறப்பிலர் மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகேதீச்சர மிராப்பகனினைந்தேத்தி
அல்லலாசறுத் தரனடியிணைதொழு மன்பராமடியாரே. 05.

பேழைவார்சடைப் பெருந்திருமகடனைப் பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற் கண்ணிபாலருளிய பொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின் மந்திகள்களிப்புற மருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப் பணிந்தநீண்மார்பர்கே தீச்சரம்பிரியாரே. 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டுநால்வருக் கறமுரைத்தருளிப்பல் லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடங்கைதொழக் காதலித்துறைகோயில்
வண்டுபண்செயு மாமலர்ப்பொழின்மஞ்ஞை நடமிடுமாதோட்டம்
தொண்டர்நாடொறுந் துதிசெயவருள்செய்கே தீச்சரமதுதானே.07.

தென்னிலங்கையர் குலபதிமலைநலிந்தெடுத் தவன்முடிதிண்டோள்
தன்னலங்கெட வடர்த்தவர்க்கருள்செய்த தலைவனார்கடல்வாயப்
பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடு மடியவரிறைஞ்சுகே தீச்சரத்துள்ளாரே. 08.

பூவுளானுமப் பொருகடல்வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநின் னடியிணைகாண்கிலா வித்தகமென்னாகும்
மாவும்பூகமுங் கதலியுநெருங்குமா தோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்தவெம்பெருமானே. 09

புத்தராய்ச்சில புனைதுகிலுடையவர் புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின் றுண்பவரியம்பிய வேழைமைகேளேன்மின்
மத்தயானையை மறுகிடவுரிசெய்து போர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபா லாவியின்கரையிற்கே தீச்சரமடைமின்னே. 10.

மாடெலாமண முரசெனக்கடலின தொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல்கேதீச்சரத் தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன்சொ னவின்றெழுபாமாலைப்
பாடலாயின பாடுமின்பத்தர்கள் பரகதிபெறலாமே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மூன்றாந் திருமுறை

## திருவிராமேச்சுரம்

பண்: பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருதீயழல்வாய்
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வார்
எரிகதிர்முத்தமிலங்குகானலிராமேச்சுரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. 01.

பொறிகிளர்பாம்பரையார்த்தயலேபுரிவோடுபையாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுந்திறமேதெரிந்துணர்வார்
எறிகிளர்வெண்டிரைவந்துபேருமிராமேச்சுரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணாளர்செயுஞ்செயலே. 02.

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாகம்
மலைவளர்காதலிபாடவாடிமயக்காவருமாட்சி
இலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சுரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. 03.

மாதனநேரிழையேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திறமேதெரிந்துணர்வார்
ஏதமிலார்தொழுதேத்திவாழ்த்துமிராமேச்சுரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே. 04.

சூலமோடொண்மழுநின்றிலங்கச்சுடுகாடிடமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வார்
ஏலநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சுரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிவிமலர்செயுஞ்செயலே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தாம்
இணைபிணைநோக்கிநல்லாளொடாடுமியல்பினராகிநல்ல
இணைமலர்மேலன்னம்வைகுகானலிராமேச்சுரமேயார்
அணைபிணைபுல்குகரந்தைசூடுமடிகள்செயுஞ்செயலே. 06.

நீரினார்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
ஊரினார்துஞ்சிருள்பாடியாடுமூவகைதெரிந்துணர்வார்
ஏரினார்பைம்பொழில்வண்டுபாடுமிராமேச்சுரமேய
காரினார்கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்செயுஞ்செயலே. 07.

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியார்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
என்றுநல்லோர்கள்பரவியேத்துமிராமேச்சுரமேயார்
குன்றினாலன்றரக்கன்றடந்தோளடர்த்தார்கொளுங்கொள்கையே. 08.

கோவலனான்முகனோக்கொணாதகுழகனழகாய
மேவலனொள்ளெரியேந்தியாடுமிமையோரிறைமெய்ம்மை
ஏவலனார்புகழ்ந்தேத்திவாழ்த்துமிராமேச்சுரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்செயுஞ்செயலே. 09.

பின்னொடுமுன்னிடுதட்டைச்சாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
இன்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சுரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. 10.

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்றிறல்வாட்டி
ஏவியல்வெஞ்சிலையண்ணனண்ணுமிராமேச்சுரத்தாரை
நாவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவிராமேச்சுரம்

பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

திருச்சிற்றம்பலம்

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
இலைவளர்தாழைகள்விம்முகானலிராமேச்சுரம்
தலைவளர்கோலநன்மாலையன்றானிருந்தாட்சியே. 01.

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
ஏவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுரம்
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே. 02.

மானனநோக்கியைதேவிதன்னையொருமாயையால்
கானதில்வவ்வியகாரரக்கன்னுயிர்செற்றவன்
ஈனமிலாப்புகழண்ணல்செய்தவிராமேச்சுரம்
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே. 03.

உரையுணராதவன்காமமென்னும்முறுவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சுரத்
தரையரவாடநின்றாடல்பேணுமம்மானல்லனே. 04.

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலவூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோர்
ஏறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சுரம்
பேறுடையான்பெயரேத்துமாந்தர்பிணிபேருமே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்கும்முடிபத்திறுத்தபழிபோக்கிய
இணையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சுரம்
துணையிலிதூமலர்ப்பாதமேத்தத்துயர்நீங்குமே. 06.

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவதுசெய்துகந்தானைவென்றவ்வினைமூடிட
இனியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சுரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. 07.

பெருவரையன்றெடுத்தேந்தினான் றன்பெயர்சாய்கெட
அருவரையாலடர்த்தன்றுநல்கியயன்மாலெனும்
இருவருநாடிநின்றேத்துகோயிலிராமேச்சுரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. 08.

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றடுமாற்றத்தார்
வாக்கியலும்முரைபற்றுவிட்டுமதியொண்மையால்
ஏக்கியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுரம்
ஆக்கியசெல்வனையேத்திவாழ்மின்னருளாகவே. 09.

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
இகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சுரம்
புகலியுண்ஞானசம்பந்தன் சொன்னதமிழ்புந்தியால்
அகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. 10.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாலவாய்

பண் : புறநீர்மை                                இராகம் : பூபாளம்

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
அங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. 01.

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியும்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்தும்
ஒற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. 02.

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடநிலவும்
சந்தமாரதரளம்பாம்புநீர் மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
அந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 03.

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டால்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங் கோபுரஞ்சூழ்மணிக்கோயில்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
அணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 04.

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்தரித்த
ஐயனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவும்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்டன்
அலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 06.

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போல்
அத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 07.

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகும்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
ஏவணங்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
ஆவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 08.

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகை நின்ற
அண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 09.

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
அண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. 10.

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியும்
அந்நலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. 11.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருகோணமலை

பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 01.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 02.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 04.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 05.

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 06.

--- --- ---- --- 07.

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 08.

அருவரா தொருகை வெண்டலையேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 09.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந்தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நான்காந் திருமுறை

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### திருவண்ணாமலை

**பண் : திருநேரிசை** **இராகம் : நவரோஸ்**

திருச்சிற்றம்பலம்

ஓதிமாமலர்கடுவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
ஆதியேயமர்கோவேயணியணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே. 01.

பண்டனைவென்றவின்சொற்பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
அண்டனேயமரர்கோவேயணியணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமா சொல்லிலேனே. 02.

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய்நின்றவெம்பெருமான்மிக்க
அருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான்மற்றொருமாடிலேனே. 03.

பைம்பொனேபவளக்குன்றேபரமனேபால்வெண்ணீறா
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேமிக்க
அம்பொனேகொழித்துவீழுமணியணாமலையுளானே
என்பொனேயுன்னையல்லாலேதுநானினைவிலேனே. 04.

பிறையணிமுடியினானேபிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டார்கொன்றையாய்வாமதேவா
அறைகழலமரரேத்துமணியணாமலையுளானே
இறைவனேயுன்னையல்லாலியாதுநானினைவிலேனே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிசடைமுடியின்மேலோர்பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா
அரிகுலமலிந்தவண்ணாமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய்பாதநான்மறப்பிலேனே. 06.

இரவியுமதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்றும்
உரகமார்பவனமெட்டுத்திசையொளியுருவமானாய்
அரவுமிழ்மணிகொள்சோதியணியணாமலையுளானே
பரவுநின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. 07.

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தாய்
ஆர்த்துவந்தீண்டுகொண்டலணியணாமலையுளானே
தீர்த்தனே நின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. 08.

பாலுநெய்முதலாமிக்கபசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூகமணியணாமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. 09.

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடிந்தவெம்மான்
உரத்தினால்வரையையூக்கவொருவிரனுதியினாலே
அரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. 10.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருப்பருப்பதம்

பண் : திருநேரிசை | இராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

கன்றினார்புரங்கண்மூன்றுங்கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னானீர்மையுநிறையுங்கொண்டு
ஒன்றியாங்குமையுந்தாமுமூர்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினாரே. 01.

கற்றமாமறைகள்பாடிக்கடைதொறும்பலியுந்தேர்வார்
வற்றலோர்தலைகையேந்திவானவர்வணங்கிவாழ்த்த
முற்றவோர்சடையினீரையேற்றமுக்கண்ணர்தம்மைப்
பற்றினார்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினாரே. 02.

கரவிலாமனத்தராகிக்கைதொழுவார்கட்கென்றும்
இரவுநின்றெரியதாடியின்னருள்செய்யுமெந்தை
மருவலார்புரங்கண்மூன்றுமாட்டியவகையராகிப்
பரவுவார்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினாரே. 03

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினாரே. 04.

கையராய்க்கபாலமேந்திக்காமனைக்கண்ணாற்காய்ந்து
மெய்யராய்மேனிதன்மேல்விளங்குவெண்ணீறுபூசி
உய்வராயுள்குவார்கட்குகவைகள்பலவுஞ்செய்து
பையராவரையிலார்த்துப்பருப்பதநோக்கினாரே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடராய்வெய்யராகிவேழத்தினுரிவைபோர்த்து
ஓடராயுலகமெல்லாமுழிதர்வருமையுந்தாமும்
காடராய்க்கனல்கையேந்திக்கடியதோர்விடைமேல்கொண்டு
பாடராய்ப்பூதஞ்சூழப்பருப்பதநோக்கினாரே. 06.

மேகம்போன்மிடற்றராகிவேழத்தினுரிவைபோர்த்து
ஏகம்பமேவினார்தாமிமையவர்பரவியேத்தக்
காகம்பர்கழறராகிக்கடியதோர்விடையொன்றேறிப்
பாகம்பெண்ணுருவமானார்பருப்பதநோக்கினாரே. 07.

பேரிடர்ப்பிணிகடீர்க்கும்பிஞ்ஞகனெந்தைபெம்மான்
காருடைக்கண்ட ராகிக்கபாலமோர்கையிலேந்திச்
சீருடைச்செங்கண்வெள்ளேறேறியசெல்வர்நல்ல
பாரிடம்பாணிசெய்யப்பருப்பதநோக்கினாரே. 08.

அங்கண்மாலுடையராயவைவராலாட்டுணாதே
உங்கண்மாறீரவேண்டிலுள்ளத்தாலுள்கியேத்தும்
செங்கண்மால்பரவியேத்திச்சிவனெனநின்றசெல்வர்
வைங்கண்வெள்ளேறதேறிப்பருப்பதநோக்கினாரே. 09.

அடல்விடையூர்தியாகியரக்கன்றோளடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்டகறையணிகண்டனார்தாம்
சுடர்விடுமேனிதன்மேற்சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப்பருப்பதநோக்கினாரே. 10.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஐந்தாந் திருமுறை

## திருவிடைமருதூர்

பண் : திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

திருச்சிற்றம்பலம்

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
வாசநாண்மலர்கொண்டடிவைகலும்
ஈசனெம்பெருமானிடைமருதினில்
பூசநாம்புகுதும்புனலாடவே. 01.

மறையினாண்மலர்கொண்டடிவானவர்
முறையினான்முனிகள்வழிபாடுசெய்
இறைவனெம்பெருமானிடைமருதினில்
உறையுமீசனையுள்குமெனுள்ளமே. 02.

கொன்றைமாலையுங்கூவிளமத்தமும்
சென்றுசேரத்திகழ்சடைவைத்தவன்
என்றுமெந்தைபிரானிடைமருதினை
நன்றுகைதொழுவார்வினைநாசமே. 03.

இம்மைவானவர்செல்வம்விளைத்திடும்
அம்மையேற்பிறவித்துயர்நீத்திடும்
எம்மையாளுமிடைமருதன்கழல்
செம்மையேதொழுவார்வினைசிந்துமே. 04.

வண்டணைந்தனவன்னியுங்கொன்றையும்
கொண்டணிந்தசடைமுடிக்கூத்தனார்
எண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலைவினைகளே. 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறதேறுமிடைமருதீசனார்
கூறுவார்வினைதீர்க்குங்குழகனார்
ஆறுசெஞ்சடைவைத்தவழகனார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே. 06.

விண்ணுளாரும்விரும்பப்படுபவர்
மண்ணுளாருமதிக்கப்படுபவர்
எண்ணினார்பொழில்சூழிடைமருதினை
நண்ணினாரைநண்ணாவினைநாசமே. 07.

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தனார்
கந்தமாலைகள்சூடுங்கருத்தனார்
எந்தையென்னிடைமருதினிலீசனைச்
சிந்தையானினைவார்வினைதேயுமே. 08.

வேதமோதும்விரிசடையண்ணலார்
பூதம்பாடநின்றாடும்புனிதனார்
ஏதந்தீர்க்குமிடைமருதாவென்று
பாதமேத்தப்பறையுநம்பாவமே. 09.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினும்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. 10.

முற்றிலாமதிசூடுமுதல்வனார்
ஒற்றினார்மலையாலரக்கன்முடி
எற்றினார்கொடியாரிடைமருதினைப்
பற்றினாரைப்பற்றாவினைபாவமே. 11.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**பண் : இலிங்கபுராண திருக்குறுந்தொகை** **இராகம் : மாயாமாளவகௌளை**

திருச்சிற்றம்பலம்

புக்கணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றாரங் கிருவரே. 01.

அலரு நீருங்கொண் டாட்டித் தெளிந்திலர்
திலக மண்டலந் தீண்டித் திரிந்திலர்
உலக மூர்த்தி யொளிநிற வண்ணனைச்
செலவு காணலுற் றாரங் கிருவரே. 02.

ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்
காப்புக் கொள்ளி கபாலிதன் வேடத்தை
ஓப்பிக் காணலுற் றாரங் கிருவரே. 03.

நெய்யும் பாலுங்கொண் டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய அழலநிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே. 04.

எருக்கங் கண்ணிகொண் டிண்டை புனைந்திலர்
பெருக்கக் கோவணம் பீறி யுடுத்திலர்
தருக்கி னாற்சென்று தாழ்சடை யண்ணலை
நெருக்கிக் காணலுற் றாரங் கிருவரே. 05.

மரங்க ளேறி மலர்பறித் திட்டிலர்
நிரம்ப நீர்சுமந் தாட்டி நினைந்திலர்
உரம்பொ ருத்தி யொளிநிற வண்ணனை
நிரம்பக் காணலுற் றாரங் கிருவரே. 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு வாங்கங் கபாலங்கைக் கொண்டிலர்
அட்ட மாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர்
சிட்டன் சேவடி வென்றெய்திக் காணிய
பட்ட கட்டமுற் றாரங் கிருவரே. 07.

வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமல ரிண்டை புனைந்திலர்
எந்தை யேறுகந் தேறெரி வண்ணனை
அந்தங் காணலுற் றாரங் கிருவரே. 08.

இளவெ ழுந்த இருங்குவ ளையமலர்
பிளவு செய்து பிணைத்தடி யிட்டிலர்
களவு செய்தொழிற் காமனைக் காய்ந்தவன்
அளவு காணலுற் றாரங் கிருவரே. 09.

கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்
அண்ட மூர்த்தி யழல்நிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற் றாரங் கிருவரே. 10.

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஆறாந் திருமுறை

## திருக்காளத்தி

**பண் : திருத்தாண்டகம்** **இராகம் : அரிகாம்போதி**

திருச்சிற்றம்பலம்

விற்றூணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண்
வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லால்
மற்றூணொன்றில்லாதமாசதுரன்காண்
மயானத்துமைந்தன்காண்மாசொன்றில்லாப்
பொற்றூண்காண்மாமணிநற்குன்றொப்பான்காண்
பொய்யாதுபொழிலேழுந்தாங்கிநின்ற
கற்றூண்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே. 01.

இடிப்பான்காணென்வினையையேகம்பன்கா
ணெலும்பாபரணன்காணெல்லாமுன்னே
முடிப்பான்காண்மூவுலகுமாயினான்காண்
முறைமையாலைம்புரியும்வழுவாவண்ணம்
படித்தான்றலையறுத்தபாசுபதன்காண்
பராய்த்துறையான்பழனம்பைஞ்ஞீலியான்காண்
கடித்தார்கமழ்கொன்றைக்கண்ணியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 02.

நாரணன்காணான்முகன்காணால்வேதன்காண்
ஞானப்பெருங்கடற்கோர்நாவாயன்ன
பூரணன்காண்புண்ணியன்காண்புராணன்றான்காண்
புரிசடைமேற்புனலேற்றபுனிதன்றான்காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணன்காண்சந்திரன்காண்கதிரோன்றான்காண்
டன்மைக்கட்டானேகாண்டக்கோர்க்கெல்லாம்
காரணன்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே. 03.

செற்றான்காணென்வினையைத்தீயாடிகாண்
டிருவொற்றியூரான்காண்சிந்தைசெய்வார்க்
குற்றான்காணேகம்பமேவினான்கா
ணுமையாணற்கொழுநன்காணிமையோரேத்தும்
சொற்றான்காண்சோற்றுத்துறையுளான்காண்
சுறாவேந்தனேவலத்தைநீறாநோக்கக்
கற்றான்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே. 04.

மனத்தகத்தான்றலைமேலான்வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியேபாடுந்தொண்டர்
இனத்தகத்தானிமையவர்தஞ்சிரத்தின்மேலா
னேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன்
புனத்தகத்தார்நறுங்கொன்றைப்போதினுள்ளான்
பொருப்பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான்
கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவனென்கண்ணுளானே. 05.

எல்லாமுன்றோன்றாமேதோன்றினான்கா
ணேகம்பமேயான்காணிமையோரேத்தப்
பொல்லாப்புலனைந்தும்போக்கினான்காண்
புரிசடைமேற்பாய்கங்கைபூரித்தான்காண்
நல்லவிடைமேல்கொண்டுநாகம்பூண்டு
நளிர்சிரமொன்றேந்தியோர்நாணாயற்ற
கல்லாடைமேல்கொண்டகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியுருவுகண்டத்தெங்கண்ணுளான்காண்
கண்டன்காண்வண்டுண்டகொன்றையான்காண்
எரிபவளவண்ணன்காணேகம்பன்கா
ணெண்டிசையுந்தானாயகுணத்தினான்காண்
திரிபுரங்கடீயிட்டதீயாடிகாண்
டீவினைகடீர்த்திடுமென்சிந்தையான்காண்
கரியுரிவைபோர்த்துகந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 07.

இல்லாடிச்சில்பலிசென்றேற்கின்றான்கா
ணிமையவர்கடொழுதிறைஞ்சவிருக்கின்றான்காண்
வில்லாடிவேடனாயோடினான்காண்
வெண்ணூலுஞ்சேர்ந்தவகலத்தான்காண்
மல்லாடுதிரடோணமேனமழுவாளன்காண்
மலைமகடன்மணாளன்காண்மகிழ்ந்துமுன்னாள்
கல்லாலின்கீழிருந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 08.

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண்
டிருவேகம்பத்தான்காண்டேனார்ந்துக்க
ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்கா
ணம்பன்காண்ஞானத்தொளியானான்காண்
வானப்பேரூருமறியவோடி
மட்டித்துநின்றான்காண்வண்டார்சோலைக்
கானப்பேரூரான்காண்கறைக்கண்டன்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 09.

இறையவன்காணேழுலகுமாயினான்கா
ணேழ்கடலுஞ்சூழ்மலையுமாயினான்காண்
குறையுடையார் குற்றேவல்கொள்வான்றான்காண்
குடமூக்கிற்கீழ்க்கோட்டமேவினான்காண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையுடையவானோர்பெருமான்றான்காண்
மறைக்காட்டுறையுமணிகண்டன்காண்
கறையுடையகண்டத்தெங்காபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 10.

உண்ணாவருநஞ்சமுண்டான்றான்கா
ணூழித்தீயன்னான்காணுகப்பார்காணப்
பண்ணாரப்பல்லியம்பாடினான்காண்
பயின்றநால்வேதத்தின்பண்பினான்காண்
அண்ணாமலையான்காணடியாரீட்ட
மடியிணைகடொழுதேத்தவருளுவான்காண்
கண்ணாரக்காண்பார்க்கோர்காட்சியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 11.

திருச்சிற்றம்பலம்

*****

உ

சிவமயம்

## திருவிடைமருதூர்

பண் திருத்தாண்டகம் இராகம் ஹரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

சூலப்படையார்தாமேபோலுஞ்
சுடர்த்திங்கட்கண்ணியுடையார்போலும்
மாலைமகிழ்ந்தொருபால்வைத்தார்போலும்
மந்திரமுந்தந்திரமுமானார்போலும்
வேலைக்கடனஞ்சையுண்டார்போலும்
மேல்வினைகடீர்க்கும்விகிர்தர்போலும்
ஏலக்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார்கமழ்கொன்றைக்கண்ணிபோலுங்
காரானையீருரிவைபோர்த்தார்போலும்
பாரார்பரவப்படுவார்போலும்
பத்துப்பல்லூழிபரந்தார்போலும்
சீரால்வணங்கப்படுவார் போலுந்
திசையனைத்துமாய்மற்றுமானார்போலும்
ஏரார்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 02.

வேதங்கள்வேள்விபயந்தார்போலும்
விண்ணுலகுமண்ணுலகுமானார்போலும்
பூதங்களாயபுராணர்போலும்
புகழவளரொளியாய்நின்றார்போலும்
பாதம்பரவப்படுவார்போலும்
பத்தர்களுக்கின்பம்பயந்தார்போலும்
ஏதங்களானகடிவார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 03.

திண்குணத்தார்தேவர்கணங்களேத்தித்
திசைவணங்கச்சேவடியைவைத்தார்போலும்
விண்குணத்தார்வேள்விசிதையநூறி
வியன்கொண்டன்மேற்செல்விகிர்தர்போலும்
பண்குணத்தார்பாடலோடாடலோவாப்
பரங்குன்றமேயபரமர்போலும்
எண்குணத்தாரெண்ணாயிரவர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 04.

ஊகமுகிலுரிஞ்சுசோலைசூழ்ந்த
வுயர்பொழிலண்ணாவிலுறைகின்றாரும்
பாகம்பணிமொழியாள்பாங்கராகிப்
படுவெண்டலையிற்பலிகொள்வாரும்
மாகமடைமும்மதிலுமெய்தார்தாமு
மணிபொழில்சூழாரூருறைகின்றாரும்
ஏகம்பமேயாருமெல்லாமாவா
ரிடைமருதுமேவியவீசனாரே. 05.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயிரண்டுமாறொன்றுமானார்போலு
மறுமூன்றுநான்மூன்றுமானார்போலும்
செய்வினைகணல்வினைகளானார்போலுந்
திசையனைத்துமாய்நிறைந்தசெல்வர்போலும்
கொய்மலரங்கொன்றைச் சடையார்போலுங்
கூத்தாடவல்லகுழகர்போலும்
எய்யவந்தகாமனையுங்காய்ந்தார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 06.

பிரியாதகுணமுயிர்கட்கஞ்சோடஞ்சாய்ப்
பிரிவுடையகுணம்பேசிற்பத்தோடொன்றாய்
விரியாதகுணமொருகானான்கேயென்பர்
விரிவிலாக்குணநாட்டத்தாறேயென்பர்
தெரிவாயகுணமஞ்சுஞ்சமிதையஞ்சும்
பதமஞ்சுங்கதியஞ்சுஞ்செப்பினாரும்
எரியாயதாமரைமேலியங்கினாரு
மிடைமருதுமேவியவீசனாரே. 07.

தோலிற்பொலிந்தவுடையார்போலுஞ்
சுடர்வாயரவசைத்தசோதிபோலும்
ஆலமமுதாகவுண்டார்போலு
மடியார்கட்காரமுதமானார்போலும்
காலனையுங்காய்ந்தகழலார்போலுங்
கயிலாயந்தம்மிடமாக்கொண்டார்போலும்
ஏலங்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 08.

பைந்தளிர்க்கொன்றையந்தாரார்போலும்
படைக்கணாள்பாகமுடையார்போலும்
அந்திவாய்வண்ணத்தழகர்போலு
மணிநீலகண்டமுடையார்போலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவரவுஞ்செலவுமாகி
மாறாதென்னுள்ளத்திருந்தார்போலும்
எந்தம்மிடர்தீர்க்கவல்லார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. 09.

கொன்றையங்கூவிளமாலைதன்னைக்
குளிர்சடைமேல்வைத்துகந்தகொள்கையாரும்
நின்றவநங்கனைநீறாநோக்கி
நெருப்புருவமாய்நின்ற நிமலனாரும்
அன்றவரக்கனலறிவீழ
வருவரையைக்காலாலமுத்தினாரும்
என்றுமிடுபிச்சையேற்றுண்பாரு
மிடைமருதுமேவியவீசனாரே. 10.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# எழாந் திருமுறை

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### திருக்கேதாரம்

பண் : நட்டபாடை இராகம் : கெம்பீரநாட்டை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெ னீரே. 01

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால்அறம் உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே. 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பைப்பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி
நம்பன்நமை யாள்வானென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 03

உழக்கேஉண்டு படைத்தீட்டிவைத் திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன்மின்
கிழக்கேசல மிடுவார்தொழு கேதாரமெ னீரே. 04

வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாயுய்ம்மின் அடிகட்கிட மதுவேயெனி லிதுவே
கீளோடர வசைத்தானிடங் கேதாரமெ னீரே. 05

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறி லன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழையொண் கனிகீறியுண் கேதாரமெ னீரே. 06

பண்ணின்தமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே. 07

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயில்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 08

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கட லிலங்கைக்கிறை மலங்கவரை யடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெ னீரே. 09.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவின்மிசை அரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்னுரை செய்த
பாஇன்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

## திருப்பருபதம்

பண் : நட்டபாடை இராகம் : கெம்பீரநாட்டை

திருச்சிற்றம்பலம்

மானும்மரையினமுமயிலினமுங்கலந்தெங்கும்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே. 01.

மலைச்சாரலும்பொழிற்சாரலும்புறமேவருமினங்கள்
மலைப்பாற்கொணர்ந்திடித்தூட்டிடமலங்கித்தனகளிற்றை
அழைத்தோடியும்பிளிறீயவையலமந்துவந்தெய்த்துத்
திகைத்தோடித்தன்பிடித்தேடிடுஞ்சீபர்ப்பதமலையே. 02.

மன்னிப்புனங்காவன்மடமொழியாள்புனங்காக்கக்
கன்னிக்கிளிவந்துகவைக்கோலிக்கதிர்கொய்ய
என்னைக்கிளிமதியாதென்றுவெடுத்துக்கவணொலிப்பத்
தென்னற்கிளிதிரிந்தேறியசீபர்ப்பதமலையெ. 03.

மையார்தடங்கண்ணாண்மடமொழியாள்புனங்காக்கச்
செவ்வேதிரிந்தாயோவெனப்போகாவிடவிளிந்து
கைபாவியகவணான்மணியெறியவிரிந்தோடிச்
செவ்வாயனகிளிபாடிடுஞ்சீபர்ப்பதமலையே. 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்குலமிரிந்தோடித்தன்பிடிசூழலிற்றிரியத்
தானப்பிடிசெவிதாழ்த்திடவதற்குமிகவிரங்கி
மானக்குறவடல்வேடர்களிலையாற்கலைகோலித்
தேனைப்பிழிந்தினிதூட்டிடுஞ்சீபர்ப்பதமலையே. 05.

மாற்றுக்களிறடைந்தாயென்றுமதவேழங்கையெடுத்து
மூற்றித்தழலுமிழ்ந்தும்மதம்பொழிந்தும்முகஞ்சுழியத்
தூற்றத்தரிக்கில்லேனென்றுசொல்லியயலறியத்
தேற்றிச்சென்றுபிடிசூழறுஞ்சீபர்ப்பதமலையே. 06.

அப்போதுவந்துண்டீர்களுக்கழையாதுமுன்னிருந்தேன்
எப்போதுவந்துண்டாலெமையயெமர்கள்சுழியாரோ
இப்போநமக்கிதுவேதொழிலென்றோடியக்கிளியைச்
செப்பேந்திளமுலையாளெறிசீபர்ப்பதமலையே. 07.

திரியும்புரநீறாக்கியசெல்வன்றனகழலை
அரியதிருமாலோடயன்றானும்மவரறியார்
கரியின்னினமோடும்பிடிதேனுண்டவைகளித்துத்
திரிதந்தவைதிகழ்வாற்பொலிசீபர்ப்பதமலையே. 08.

ஏனத்திரள்கிளைக்கவெரிபோலமணிசிதறத்
தீயென்றவைமலைச்சாரலிற்றிரியுங்கரடீயும்
மானும்மரயினமும்மயின்மற்றும்பலவெல்லாம்
தேனுண்பொழில்சோலைமிகுசீபர்ப்பதமலையே. 09.

நல்லாரவர்பலர்வாழ்தருவயனாவலவூரன்
செல்லலுறவரியசிவன் சீபர்ப்பதமலையை
அல்லலவைதீரச்சொனதமிழ்மாலைகள்வல்லார்
ஒல்லைசெலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே. 10.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருக்கேதீச்சரம்

பண் : நட்டபாடை இராகம் : கெம்பீரநாட்டை

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடைஞானன்பசுவேறிந்நனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமழுவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேல்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே. 01.

சுடுவார்பொடிநீறுந்நலதுண்டப்பிறைக்கீளும்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேல்
திடமாவுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே. 02.

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேல்
செங்கண்ணரவசைத்தான்றிருக்கேதீச்சரத்தானே. 03.

கரியமறைக்கண்டன்னலகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகருள்
பரியதிரையெறியாவருபாலாவியின்கரைமேல்
தெரியும்மறைவல்லான்றிருக்கேதீச்சரத்தானே. 04.

அங்கத்துறுநோய்கள்ளடியார்மேலொழித்தருளி
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்தமடவாளொடுபாலாவியின்கரைமேல்
தெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே. 05.

வெய்யவினையாயவ்வடியார்மேலொழித்தருளி
வையமலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பையேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேல்
செய்யசடைமுடியான்றிருக்கேதீச்சரத்தானே. 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்துறுநோய்கள்ளடியார்மேலொழித்தருளி
வானத்துறுமலியுங்கடன்மாதோட்டநன்னகரில்
பானத்துறுமொழியாளொடுபாலாவியின்கரைமேல்
ஏனத்தெயிறணிந்தான்றிருக்கேதீச்சரத்தானே. 07.

அட்டன்னழகாகவ்வரைதன்மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாலும்பொழின்மாதோட்டநன்னகரில்
பட்டவ்வரிநுதலாளொடுபாலாவியின்கரைமேல்
சிட்டன்னமையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. 08.

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின்மாதோட்டநன்னகரில்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேல்
தேவன்னெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. 09.

கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருள்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டன்னுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே. 10.

திருச்சிற்றம்பலம்

*****

வ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய**

# எட்டாந்திருமுறை திருவாசகம்

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து(ம்) மண்ணிறைந்து(ம்) மிக்காய்
- விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென ஓங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியனே
வெய்யாய்த் தணியாய் இயமான நாம் விமலா
பொய்யா இனவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதே இன்பப் பெருமாளே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த வன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாய்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றே னெம்மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

## திருக்கழுக்குன்றப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

## திருக்கோவையார்

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென் றாரம் பலத்துள்நின்ற
ஓரள வில்லா ஒருவன் இருங்கழ லுன்னினர்போல்
ஏரளவில்லா அளவின ராகுவ ரேந்திழையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஒன்பதாந் திருமுறை

## கருவூர்த்தேவர் திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தன் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கிய திரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே.

## சேந்தனார் அருளியச்செய்த திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

புரந்தரன் மால்அயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம்என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

உ

சிவமயம்

# பத்தாந் திருமுறை

## திருமூலர் திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## பதினோராந் திருமுறை

## நக்கீரதேவநாயனார்

திருச்சிற்றம்பலம்

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி - நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்னதென நின்றான் மலை.

உ

சிவமயம்

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார்

திருச்சிற்றம்பலம்

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

மதிவளர்சடைமுடிமன்றுளாரைமுன்
துதிசெயும்நாயன் மார்தூய சொல்மலர்
பொதிநலன் நுகர்தருபுனி தர்பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இந்நூலில் அடங்கிய ஆலயக்குறிப்பு

**திருவிடைமருதூர்**

சோழநாட்டிலுள்ள சிறந்த சிவத்தலம். ஒரு ஊழிக்காலத்தில் பதினொரு உருத்திரர்கள் இங்கு வழிபட்டு சிவராத்திரியன்று அருள் பெற்றனர். சோழநாடுமுழுவதையுமே ஒரு சிவாலயமாக நோக்கும் போது இத்தல மூலவரே மூலஸ்தானமாக அமையும் சிறப்பு அமைவதாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலய மூர்த்திமகாலிங்கேசுவரர் என்பர். தைப்பூசமும் இத்தலத்திற்கு சிறப்புநாளாகும்.

## ஸ்ரீ சைலகம்

ஆந்திரா ராச்சியத்திலுள்ள இத்தலத்துக்கு திருப்பருப்பதம் மல்லிகார்ச்சுனம் என்றபெயர்களும் உண்டு இத்தலவிருட்சம் மருதமரமாகும். சுவாமி பெயர்பருப்பதநாதர் - அம்பாள் பெயர் பருப்பதநாயகி சிறந்த சக்தி பீடங்களில் இதுவும்ஒன்று அம்பிகையை பிரமாம்பிகை என்றும் வணங்குவர். திருநந்திதேவரே மலையாகிச் சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருக்கிறார். பூலோக கைலாசம் எனப்படும் தலங்களில் இதுவும் ஒன்று விநாயகர் சித்திபுத்திகளைத் திருமணம் செய்ததலமும் இதுவே என்பர். சிவராத்திரி இத்தலத்துக்கு மிகச்சிறப்பு ஆகையால் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் பெருந்தொகையாகக்கூடுவார். இம்மலையில் சிகரத்தைத் தூரத்திலிருந்து தரிசிப்பவர்கட்கு மறுபிறவி இல்லை என்று ஆதிசங்கரர் பாடியிருக்கிறார்.

## திருவண்ணாமலை

தமிழ்நாட்டிலுள்ள மகிமைவாய்ந்த சிவத்தலங்களுள் இதுவும் ஒன்று. அக்கினித் தலம் எனப்படுகின்றது. ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியின் அடிமுடி தேடிக்களைத்து மனப்பக்குவம் பெற்ற பிரம விட்டுணுக்கள் மகாசிவராத்திரினத்தின் இரவு மூன்றாம் காலமாகிய லிங்கோற்பவ காலத்தில் இத்தலத்திலேயே சிவபெருமானைத் தரிசித்தனர். அருட்பெரும் சோதி தோன்றியநாள் கார்த்திகைக்குக் கார்த்திகைநாள். சிவபெருமான் வெளிப்பட்டது சிவராத்திரிநாள் லிங்கோற்பவ காலம். அப்பெரும்சோதியே பின் திருவண்ணாமலையாக ஆகியிருக்கின்றது. இங்கு மலைவலம் வருதல் சிறப்புவழிபாடு. திருக்கார்த்திகையன்றும் சிவராத்திரியன்றும் ஏராளமானவர் மலைவலம் வருவர். சுவாமி பெயர் அண்ணாமலையார் அம்பிகை பெயர் உண்ணாமுலைநாயகி என்பதாகும்.

## திருக்கேதாரம்

இமயமலைச்சாரலில் உள்ள மகிமைமிகு ஆலயம். நூதனமான அமைப்புடன் கூடிய சிவலிங்கம். ஐப்பசியில் இருந்து மாசிசிவராத்திரி தினம் வரை ஐந்துமாதங்கள் மனிதர் நடமாடமுடியாத பனிப்பொழிவு உள்ள இடம். ஐப்பசியில் அங்குள்ள கற்குழியில் நெய்நிரப்பி தீபமேற்றிவிட்டு அங்கு கதவு சாத்தி வந்தவர்கள் சிவராத்திரியன்றே சென்று ஆலயத்தைத் திறப்பர் என்றும் அப்படித்திறக்கும் போது அந்த நெய்த்தீபம் எரிந்துகொண்டிருக்கும் என்றும் கூறுவர். கேதாரசூழலில் பலவிதமலர்கள் காணப்படும் என்றும் அம்மலர் இனங்கள் ஆறாயிரம் இருக்கும் என்று சிவமஞ்சரி என்னும் நூல் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீ இராமேஸ்வரம்

தமிழ்நாட்டிலுள்ள ஜோதிலிங்கத்தலம் இது ஒன்றேயாகும். இராவண யுத்தத்திற்குமுன்னும் பின்னும் இராமர் இத்தலத்தில் சிவபெருமானைப்பூசித்தார் என்பர். இராவண யுத்தம் முடிந்து அயோத்தி திரும்பும்போது போரினால் தமக்கேற்பட்ட பாபங்களைப் போக்க ஸ்ரீ ராமர் சிவபெருமானின் திருவுருவை மணலால் அமைத்து வழிபட்டார். சுவாமிக்கு இராமநாதர் என்று பெயர்.

காசி யாத்திரை செய்பவர்கள் இராமேஸ்வரயாத்திரையையும் மேற்கொள்ள வேண்டும். பிள்ளைப்பேறற்ற தம்பதியர் இங்குள்ள எல்லாத்தீர்த்தங்களிலும் முறைப்படி நீராடி வழிபடப் பிள்ளைப்பேறு கிடைக்கும். சேர் பொன் இராமநாதன் இராமேஸ்வர யாத்திரைப் பயனாகப்பிறந்த தாலேயே அவருக்குப் பெற்றோர் இராமநாதன் எனப் பெயரிட்டனர் என்பர். இத்தலத்தின் சிறப்புக்கள் மிகப்பல.

### திருக்காளத்தி

இந்தியாவிலும் இலங்கையிலும் தட்சணகைலாசம் என்று மதிக்கப்படும் பல சிவத்தலங்கள் உள்ளபோதும் தட்சண கைலாசம் என்ற முழுப்பெருமைக்கும் உரியது திருக்காளத்தியே யாகும். கைலைபாதி காளத்தி பாதி என்னும் பதினோராந்திருமுறை அந்தாதி காளத்திக்கும் கைலைக்கும் உள்ள பெரும் தொடர்புக்குப் பெரும் சாட்சியாக உள்ளது. கண்ணப்பர் வரலாற்றுத் தொடர்பினால் சைவமக்கள் அனைவராலும் எண்ணப்படுவது. இத்தலத்திலும் மகாசிவராத்திரியை ஒட்டியே வருடப் பெருவிழா நிகழ்கின்றது. சிவராத்திரியின்போது பெரும்திரளான மக்கள் கூடும் இத்தலம் தினமும் யாத்திரீகர்களைக் கவரும் அருட்சிறப்புடன் திகழ்கின்றது.

### திருஆலவாய்

மதுரை என்னும் பெயரால் இன்று எல்லோராலும் அறியப்படும் பெரும் சிவத்தலம். பாண்டிநாட்டில் உள்ளது. இங்கு சுவாமிக்குப் போலவே அம்பாளுக்கும் மகிமை அதிகம். சுவாமி பெயர் சோமசுந்தரர். அம்பாள் பெயர் மீனாட்சி. அம்பாளின் பெருமைகாரணமாகப் பலர் மீனாட்சிகோவில் என்றே அழைப்பர். சுவாமி அறுபத்துநான்கு திருவிளையாடல் நிகழ்த்திய தலம். சித்திராபூரணை இத்தலத்திற்கு உரிய நாள். சோமவாரம் மகாசிவராத்திரி என்பன இத்தலத்துக்குரிய புண்ணியகாலங்களில் சிறப்பானவை என்று திருவிலையாடற்புராணம் பாடுகின்றது.

### திருவாரூர்

சோழநாட்டுப்புண்ணியத் தலங்களுள் சிறப்பானது. தியாகராச லீலை என்னும் நூல் இத்தலத்தில் இறைவன் முன்னூற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான அருள்விளையாடல்களை நிகழ்த்தியமை பற்றிக் கூறும். சிவலீலைகளை மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை செய்யுள் ரூபமாகப் பாடியிருக்கின்றார். ஸ்ரீமத் நாராயணர் தன் மனச்சங்கற் பத்தால் உருவாக்கி வழிபட்ட சோமாஸ்கந்த மூர்த்தியை முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனிடம்பெற்று இத்தலத்தில தாபித்த வரலாற்றை கந்தபுராண கந்தவிரதப்படலம் விரிவாகக் கூறுகின்றது. மகா சிவராத்திரியின் லிங்கோற்பவ காலத்தில் முசுகுந்தசகஸ்ரநாம அருச்சனை நிகழும். பத்துரூபா பதினைந்து ரூபாவுக்கு நிவேதனப் பூசை நிகழ்த்தக்கத்ததாயிருந்த 1960ம் ஆண்டுக்கு முற்பட்டகாலப் பகுதியில் முறைப்படி முசுகுந்த சகஸ்ரநாமார்ச்சனையை தனிப்பட்ட உபயமாகச் செய்விக்க 150 ரூபா தேவைப்படும் என அறிந்திருக்கின்றேன். முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை அவ்வளவுவிஸ்தாரமாகச் செய்யும் வழக்கம் திருவாரூரில் உண்டு என்பதற்காக இக்குறிப்பு. இப்படியான சகஸ்ரநாமார்ச்சனை மகாசிவராத்திரி அன்று வழமையாக நிகழும் தன்மையைக் கொண்டே திருவாரூர் மகாசிவராத்திரிச் சிறப்பை ஊகிக்கலாம். இத்தலச்சிறப்பும் மிகமிகவிரிவானது.

**திருக்கேதீச்சரம்**

சிவபூமி என்று திருமந்திரம் பாடும் இலங்கையில் யாழ்ப் பாணத்திற்கருகிலுள்ள மன்னாரில் இத்தலம் உள்ளது. கேது பூசித்து அருள்பெற்றது. இராமேஸ்வரத்தில் இருந்தவாறே சம்பந்தரும் சுந்தரும் இத்தலத் திறைவனைப்பாடிப் பணிந்திருக்கிறார்கள். இங்குள்ள பாலாவிதீர்த்தச்சிறப்பை சுந்தரர் பதிகம் பாடல் தோறும் போற்றுகின்றது. இத்தலத்து மகோற்சவம் வைகாசிவிசாகத்தை ஒட்டி நிகழ்கின்றபோதும் மகாசிவராத்திரி வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள அன்பர்கள் சிவராத்திரியின்போது இங்கு வழிபாடு செய்யத் திரளுவர்.

**நகுலேஸ்வரம் எனும் கீரிமலை**

இலங்கையின் யாழ்ப்பாணத்திலேயே உள்ள உத்தமமான சிவத்தலும் இலங்கையிலுள்ள புனிதத்தலங்களான திருக்கேதீச்சரம் திருக்கோணமலை கதிர்காமம் போன்ற பல இடங்களின் மகிமையைக் கூறும் தட்சிணை கைலாச புராணம் என்னும் நூல் இத்தலத்தின் பெருமையை விதந்து கூறுகின்றது. கண்டகி என்னும் சாகரசங்கமத்தீர்த்தச் சிறப்பும் உடைய இத்தலத்தின் சிறப்பு நாள் மகாசிவராத்திரி நாளேயாகும். மகாசிவராத்திரி தினத்தைத் தேர்த்திருவிழாவாகக் கொண்டே இங்கு பெருவிழா நிகழும். மகாசிவராத்திரித் தீர்த்தமும் ஆடி அமாவாசைத் தீர்த்தமும் கீரிமலைக்குரிய விசேடங்களாகும். இத்தலத்தில் பல ஞானியரின் சமாதிகள் அமைந்திருப் பதும் குறிப்பிடத்தக்க மகிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தினம்

# தினம்

# உங்கள் கரங்களில் உலவும்

# வலம்புரி நாள் இதழ்

## வாரந்தோறும் சங்குநாதம்

## அன்பளிப்பு

## வலம்புரி அன் கோ

இல.2. இரண்டாம் ஒழுங்கை,

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org